நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாற**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC. 298 /2021**

வழக்கு சாட்சி- **அ.சா.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | குமார் | : | ஜாதி | |
| தந்தை /கணவர் பெயர் | கலியமூர்த்தி | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | அடஞ்சூர் | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 40 /2024 |

( எதிரி ஆஜர் )

**நாள் : 08.02.2024**

**முதல் விசாரணை:**

**1)** நான் அடஞ்சூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 எனது அக்கா ஆவார். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சின்னதுரை என்பவர் எனது மாமா ஆவார். கடந்த 19.01.2020 ஆம் தேதியன்று மாலை 04.00 மணி அளவில் எனது அக்கா, மாமா, அவர்களது மகன் மூவரும் இரு சக்கர வாகனத்தில் அடஞ்சூர் வந்துவிட்டு அவர்கள் ஊருக்கு சென்று கொண்டிருந்தபோது புள்ளவாய்க்கால் அருகே எதிர் திசையில் வந்த மூவர் இரு சக்கர வாகனத்தில் வேகமாக வந்து அவர்கள்மீது மோதியதில் மூவரும் கீழே விழுந்துவிட்டார்கள். அ.சா.1 ன் மகனுக்கு முன்தலையிலும், கையிலும் அடிபட்டிருந்தது. மாமாவிற்கு பிறப்பு உறுப்பில் அடிபட்டிருந்தது. திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றோம். மருத்துவர் பரிசோதித்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக சொன்னார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)